www.padippakam.com

இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

★ வார இதழ் ★ இதழ் 376 ★ 1987 நவம்பர் 20 வெள்ளிக்கிழமை ★ DM 2,– / 6 F

# தமிழ் தேசிய இனத்தின் தேசிய உரிமையை நசுக்கும் மாகாணசபை சட்டம் முதலாளித்துவ ஆட்சியை பேணும் பிற்போக்குச் சட்டம்

## 'தொழிலாளர் பாதை' ஆசிரியர் குழு அறிக்கை

**யூ. என். பி. அரசாங்கம் நவம்பர் 13 ம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய மாகாணசபை சட்டமானது இலங்கை முதலாளித்துவ வர்க்க ஆட்சியை பேணும் பொருட்டு யூ. என். பி. அரசாங்கமும் இந்திய ராஜீவ் காந்தி அரசாங்கமும் தமிழ் இனத்திற்கும் தொழிலாள வர்க்கத்திற்கும் எதிராக இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் ஆரம்பித்துள்ள இரத்தக் களரி வேலைத்திட்டத்தின் மற்றுமோர் நடவடிக்கையாகும்.**

ஏகாதிபத்திய, தேசிய முதலாளித்துவ நலன்களைப் பேணும் பொருட்டு இப்பிராந்தியத்தில் எழும் மக்கள் எழுச்சியை ஒடுக்கும் மூலோபாயத்துடன் இந்திய ராஜீவ் காந்தி அரசாங்கம் இலங்கையில் தலையிடும் முகமாக ஏற்படுத்திய இந்திய — இலங்கை ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா முதலான பிரபல ஏகாதிபத்திய நாடுகளின் ஆட்சியாளரது பூரண ஆதரவும் தலையீடும் கிடைத்தது. அங்ஙனமே தற்போது இந்த ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு கிழக்கில் இந்திய படை நடத்தும் மக்கள் கொலை ஆக்கிரமிப்பிற்கும், மாகாண சபை சட்டத்திற்கும் ஏகாதிபத்தியத்தின் ஆதரவு கிடைத்துள்ளது.

இலங்கை — இந்திய பிற்போக்கு ஆட்சியாளர்கள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது, தமிழ் இனத்திற்கு ''நிவாரணம் வழங்கவும்'' இலங்கையில் ''ஜனநாயகத்தை பலப்படுத்தவுமே என்ற சமசமாஜ — கம்யூனிச — இ. தொ. கா. தலைமைகளும் நவசமசமாஜ, அரசாங்க லிகிதர் சேவையாளர் சங்க, இலங்கை ஆசிரியர் சங்க மத்தியவாத தலைமைகளதும் கதையளப்புக்கள் இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பினாலும் தற்போதைய மாகாண சபை சட்டத்தினாலும் தவிடு பொடியாகி உள்ளது.

இந்திய, இலங்கை ஒப்பந்தத்தினால் தமிழ் இனத்திற்கு கிடைத்துள்ள 'நிவாரணம்' 'ஜனநாயகத்தின்' தரம் இந்திய ஆக்கிரமிப்பு படை தற்சமயம் நடாத்தி வரும் மனித பலியெடுப்புக்கள், உடமை அழிப்புக்கள் மூலம் அம்பலமாகியுள்ளது.

மாகாண சபை சட்டத்தினால் தமிழ் தேசிய இனத்துக்கு கிடைத்துள்ள நிவாரணம் எனப்பட்டதின் அளவு எத்தகையது எனில் காந்தி — ஜயவர்தன அரசாங்கத்துடனே உறவுகள் மூலம் வடக்கு — கிழக்கில் காலூன்றவும் தமது சுரண்டல் சலுகைகளை பெற்றுக் கொள்ளவும் தருணம் பார்த்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமை தமிழர் கண்களில் மண்தூவ அவசியமான சட்ட விதிகளை கூட மாகாணசபை கொண்டிருக்க வில்லை. தமிழர் விடுதலை கூட்டணியின் பிற்போக்கு தலைமை, இதை விடச் சிறந்த கொடுக்கல் வாங்கலை வேண்டி ராஜீவ் காந்திக்கு கடிதம் எழுதியுள்ளன. அது கூறுவதாவது:

''சட்டத்தின் உள்ளடக்கம் திருப்தியானதும் நியாயமானதும், நின்று பிடிக்கக் கூடியதும் என தமிழ் இனத்திற்கு சிபார்சு செய்ய முடியாது'' (ஹிந்து 1987 நவம்பர் 2)

(2 ம் பக்கம் பார்க்கவும்)

## பு. க. க. அங்கத்தினர்களை கொலை செய்ய யூ. என். பி குண்டர்கள் முயற்சி

கொழும்பு ஜம்பட்டா வீதிப் பக்கமாக 'தொழிலாளர் பாதை' 'கம்கறு மாவத்த' பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டிருந்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்னணி உறுப்பினர்கள் மூவரை யூ. என். பி. குண்டர்கள், தாக்கி கொலை செய்ய முயன்று உள்ளனர்.

நவம்பர் 12 ம் திகதிய இத்தாக்குதல் சம்பவத்தில் பு. க. க. மத்திய குழு உறுப்பினர் ரீ. என். நிஹிஷான் கே. ஏ. சரத்சந்திரசிரி, கீதானந்த ஜயசேகர என்போர் பாதிக்கப்பட்டனர். இத்தாக்குதலை ஒழுங்கு செய்தவர் கொழும்புத் துறைமுக யூ. என். பி. தொழிற்சங்க அமைப்பாளரும் பேர்போன 'கிறிமினலும்' ஆன டிக்சன் என்பவனுவான். கொட்டாஞ்சேனை செல்லையா தோட்டத்தைச் சேர்ந்த இவன் இரத்தினம் வீதியில் உள்ள யூ. என். பி. குண்டர்களுடன் இணைந்து இத்தாக்குதலை நடாத்தி உள்ளான். இந்த எதிர்ப்புரட்சிக் குண்டர் தாக்குதலை கண்டிக்கும் படியும், இதில் சம்பந்தப்பட்ட குண்டர்களுக்கும் முதலாளித்துவ அரசுக்கும் இடையேயான தொடர்புகளை அம்பலப்படுத்தும் படியும் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ. தொ. கா கட்சிகளையும் மற்றும் தொழிற் சங்க இயக்கத்தையும் தொழிலாள வர்க்கம் கோர வேண்டும்.

### 'முறைப்பாடு'

இத்தாக்குதல் இடம் பெற்ற தினம் காலையில் இப்பகுதியில் உள்ள பென்ஜியன் வீதியில் பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டிருந்த பு. க. க. உறுப்பினர்களான நந்த விக்கிரமசிங்க, ஆனந்த வக்கும்புற, சரத் சந்திரசிரி, கீதானந்த் ஜயசேகர கொட்டாஞ்சேனை பொலிசி

( 7ம் பக்கம் பார்க்கவும்)

**வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!**

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் தேசிய இனத்தின் . . .

[முன் பக்கத் தொடர்ச்சி]

வடக்கு கிழக்கு தமிழ் தேசியப் போராட்டத்தை அடக்குவதற்கு அவ்விரு பிரதேசங்கள் இரண்டிலும் இராணுவ சர்வாதிகார ஆட்சியை தொடுத்துள்ள ராஜீவ் காந்தி அதனை தமிழ் ஈழ விடுதலைப் புலி அமைப்பு தலைமைகளுக்கு நினைவூட்டும் பொருட்டு டில்லியில் பத்திரிகையாளர் மகாநாட்டைக் கூட்டி டில்லிக்கும் — சென்னைக்கும், தூது அனுப்புவதை நிறுத்தி இந்திய படையுடன் கொடுக்கல் வாங்கல்களை நடாத்தி கொள்ள வேண்டும் 'என்று தெரிவித்துள்ளார். நவம்பர் 9 ம் திகதி பாராளுமன்றத்தில் பேசிய ராஜீவ் காந்தி மாகாண சபை சட்டம் பற்றி குறிப்பிடுகையில் 'எவ்வாறு எனினும் அதன் சிற்சில சட்ட விதிகள் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பினை முற்றாக நிறைவேற்ற வில்லை'' என கூறியுள்ளார். அதே வாயால் அவர் மிக குரூரமாக இந்திய இலங்கை ஒப்பந்தமானது இந்து முதலாளிகளது தேசிய முயற்சி ஒன்றென்பதால் தமிழ் இனம் எத்தகைய இழப்பிலும் அதற்கு அடிபணிய வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு காரணம், இந்து முதலாளித்துவமானது இந்தியாவிற்கு உள்ளும் உபகண்ட நாடுகளிலும் எழும் மக்களெழுச்சியை சுய வர்க்க ஆட்சிக்கு பலத்த மிரட்டல் ஆக கருதுவதே. இந்த ஆட்சியாளர் முதலாளித்துவத்தின் பகிரங்க கைப்பொம்மையாளராக முன் நிற்கின்றனர்.

இந்திய ஆட்சியாளர், ஆக்கிரமிப்பின் மூலமும் மாகாண சபை மசோதாவுக்கு ஆதரவு அளிப்பதன் ஊடாகவும் தமது சுய எதிர்ப்புரட்சிகர வேலைத் திட்டத்தை வெளிக் காட்டி உள்ளனா. இந்நிலையில் ஈழ விடுதலைப் புலி இயக்க தலைமைகள் இவர்களுடன் அரசியல் பேச்சுவார்த்தையில் ஈடுபட முடியுமா என ஆய்கின்றனர் இதற்காக இவ்வியக்க பிரதி தலைவர் மகேந்திரராஜா (மாத்தயா) தி. மு. க. தலைவர் கருணாநிதிக்கும் அ. தி. மு. க. எம். ஜீ. ராமச்சந்திரனுக்கும் கடிதம் எழுதியுள்ளார். இந்திய — இலங்கை ஒப்பந்தம், 'இடைக்கால நிர்வாகம்' மாகாண சபை சட்டம் என்பவற்றை ஏற்கும் எந்தவொரு தலைமையும் காந்தி — ஜயவர்தன அரசாங்கத்தின் கைப்பொம்மைகளாகவே செயற்பட நேரிடும்.

இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர் பற்றி குட்டி முதலாளித்துவ தலைமைகள் கொண்டிருந்த தப்பா[illegible] இந்திய ஆக்கிரமிப்பின் முன் தமிழ் இனத்தை அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கி தனிமைப் படுத்தியது. இன்றும் விடுதலைப் புலிகளின் தலைமை அப்பாதையிலேயே செல்கின்றது. மறு புறத்தில் அதனால் நன்மை அடைவது வறியோரையும் தொழிலாளரையும் மோசமாக சுரண்டும் இந்திய முதலாளிகளே தமிழ் நாட்டில் கருணாநிதி உட்பட்ட கொடிய முதலாளித்துவ வாதிகள் யாழ்ப்பாணத்தில் அப்பாவி குடிமக்களின் கொலைகளையிட்டு முதலைக் கண்ணீர் வடித்து 'எதிர்ப்பு நடவடிக்கைகளை' ஒழுங்கு செய்வது தமிழ் இனவாதத்தை தூண்டி தொழிலாளர் வறியவர்களது இரத்தத்தை உறிஞ்சும் முதலாளி வர்க்க ஆட்சியை தொடர்வதற்கே. இவர்கள் பக்கம் விடுதலைப் புலிகள் இயக்கம் திரும்புவதன் மூலம் அப்பிற்போக்கு அரசியலுக்கு பக்க பலம் கிடைப்பதோடு தொழிலாளர்கள் வறியவர்களிடம் இருந்து வடக்கு — கிழக்கு தமிழினம் தனிமைப்படுகின்றது.

இலங்கை முதலாளித்துவ அரசினை பேணும் பிற்போ மாகாண சபைச் சட்டம் ஒரு புறம் இந்திய ஆக்கிரமிப்பு படையின் துப்பாக்கி முனை தமிழ் இனத்தினை அமுக்கி கொண்டுள்ள நிலையிலும் மறு புறம் சமசமாஜ கம்யூனிச கட்சிகளும் இ. தொ. கா. மற்றும் மத்திய வாத துரோகிகள் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீன தலையீட்டினை தவிர்க்க யூ. என். பி. அரசாங்கத்தின் சார்பில் முன்னணியில் நிற்கும் நிலையிலும் நிறைவேறி உள்ளது.

யூ என். பி அரசாங்கத்துக்கும் தமக்கும் இடையே பெரும் முரண்பாடுகள் இருப்பதாகவும், இந்திய — இலங்கை ஒப்பந்தம் மாகாண சபைச் சட்டங்களை எதிர்ப்பதாயும் கதையளந்த படி சிறீலங்கா சுதந்திரக் கட்சி முதலாளிகள் நடத்தும் பிரசாரம் பிற்போக்கு நோக்குடைய பொய் பிரச்சாரமாகும்.

தமிழ் இனத்தை ஒடுக்கவும் முதலாளித்துவ அரசினைப் பேணவும் ஜே ஆர். ஜயவர்தன இந்திய இலங்கை முதலாளித்துவ ஆட்சியாளருடன் சேர்ந்து சமர்பித்து உள்ள இரத்தக் களரி வேலைத்திட்டமே சிறிமா பண்டாரநாயக்காவினதும் வேலைத்திட்டமாகும். இலங்கை முதலாளித்துவ ஆட்சியை பேண அமுல் படுத்த உள்ள மிகச் சிறந்த வேலைத்திட்டம் இந்திய முதலாளித்துவத்தின் எதிர்ப்புரட்சிகர ''நட்பு ஆதரவை'' பெறுவதே ஆகும் என சிறிமா பண்டாரநாயகா ஓர் தடவை மட்டும் கூறவில்லை. 1971 ன் கிளர்ச்சிடை அடக்க இந்திய முதலாளித்துவத்தின் உதவியை பெற்று இலங்கையின் முதலாளி வர்க்கத்திற்கு முன் அனுபவத்தை ஏற்படுத்தியும் கொடுத்தாள்.

இந்திய — இலங்கை ஒப்பந்தத்திற்கும் மாகாண சபை சட்டத்திற்கும் சுதந்திரக் கட்சி முதலாளிகள் போலி எதிர்ப்பு காட்டுவதேன்? யூ. என். பி. அரசாங்கம் தொழிலாள விரோத, தமிழின விரோத வறியவர்களுக்கு எதிரான ஆட்சியை ஏற்படுத்தி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி — சமசமாஜ — கம்யூனிச கூட்டரசாங்கத்தினால் தாக்குண்டு வலது பக்கம் சாய்ந்த குட்டி முதலாளித்துவ கூட்டத்தை கிளப்பிய படியே ஆட்சிப்பீடம் ஏறியது. சுய 10 ஆண்டுக்கால ஆட்சியில் தொழிலாளர், வறிய மக்கள் தமிழ் இனம் என்பவற்றின் மீது பாரிய அழிவை ஏற்படுத்தி, ஆத்திரத்திற்கு இலக்காகி உள்ள அரசாங்கத்திற்கு எதிராக தொழிலாள வர்க்கம் மட்டுமல்ல மேற் குறிப்பிட்ட குட்டி முதலாளித்துவ பிரிவும் கூட கிளர்ந்து எழுந்து உள்ளது. சிறீலங்கா சுதந்திர கட்சி முதலாளிகள் இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கும் மாகாண சபை சட்டத்திற்கும் போலி எதிர்ப்பை காட்டுதன் நோக்கம், இனவாத குழப்பங்களின் மூலம் இக்குட்டி முதலாளித்துவ தட்டினை முதலாளித்துவத்துடன் இணைந்தவாறு தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக அணி திரள்வதோடும் சிறீலங்கா சுதந்திர கட்சியின் பிற்போக்கு அரசியலானது 'தேசபக்த' 'தாயகம் காப்பு' என்ற வகையில் பெரிதாக தூண்டப்பட்டு குட்டி முதலாளித்துவ மக்கள் விடுதலை முன்னணி பேரினவாத முதலாளித்துவத்தின் இப்பிற்போக்கு இலக்குடன் இணைந்துள்ளது.

காந்தி — ஜயவர்தன அரசாங்கங்களின் காவல் நாயாகி இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கும் மாகாணசபை சட்டத்திற்கும் உதவி அளிக்கும் சமசமாஜ — கம்யூனிச — இ. தொ. கா. துரோக தலைமைகள் தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக பயங்கர எதிர்ப்புரட்சிகர வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு உள்ளனர் தமிழ் இனத்தை அடக்கி ஒடுக்கி விட ஜயவர்தன — காந்தி அரசாங்கங்களுக்கு ஆதரவு அளித்து தொழிலாள வர்க்கத்தில் இருந்து தமிழ் விடுதலை இயக்கத்தை பிளவு படுத்திவி அவர்கள் வேண்டுமென்றே செயற்படுகின்றனர் முதலாளித்துவம் தூண்டி உள்ள இனவாத தீச்சுவாலைக்கும் அடிப்படை ஜனநாயக உரிமைகளை அழிப்பதற்கும் எதிராக யூ. என். பி. அரசாங்கத்தை விரட்டியடிக்கும் பொருட்டு தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டாமல் அரசாங்கத்திற்கு பக்கபலம் அளித்து வரும் இத்தலைமைகள் குழப்பமுறும் ஒடுக்கப்பட்ட சனப்பிரிவினரை சிறீலங்கா சுதந்திர கட்சி உட்பட்ட முதலாளித்துவத்தின் கீழ் தள்ளி விடுகின்றனர். அது தமிழ் இனத்திடமிருந்தும் ஏனைய ஒடுக்கப்படுவோரிடம் இருந்தும் தொழிலாள வர்க்கத்தை தனிமைப் படுத்தி தாக்குதலுக்கு கீழ்ப்படுத்தி இராணுவ ஆட்சி மூலம் நசுக்க யூ. என். பி. — சிறீலங்கா சுதந்திர கட்சி முதலாளிகளுக்கு வழங்கும் எதிர்ப்புரட்சிகர ஆதரவாகும்.

யூ. என். பி. அரசாங்கத்தின் இந்த யுத்தத்தினால் இது வரை பொருளாதாரத்தில் ரூ. 8,000 கோடி ரூபாய் அழிவு ஏற்பட்டுள்ளதாக நிதியமைச்சர் ரோனி டீ மெல் குறிப்பிட்டுள்ளார் 9.054 கோடி ரூபாய்கள் கொண்ட பாரிய வெளிநாட்டு கடனுக்காக 1.000 கோடி ரூபாய்களை தாண்டியதாக ஒரேயடியாக உயர்ந்துச் செல்லும் கடன் வட்டி பொட்டலத்தை இவ்வாண்டிலிருந்து ஏகாதிபத்திய வங்கியாளருக்கு கையளிப்பதற்காக தொழிலாள ஒடுக்கப்பட்ட மக்களை நசுக்கிப் பிழிய வேண்டி உள்ளது பாரிய பொருளாதார அழிவின் காரணமாக இது வரை நாட்டின் வேலையில்லா பிரச்சினை நூற்றுக்கு 24 — 28 சத வீதத்திற்கு இடையில் முன்னொரு போதும் இல்லாத மட்டத்திற்கு உயர்ந்து உள்ளதாக நிதியமைச்சர் மீண்டும் மீண்டும் உச்சாடனம் செய்கிறார் ஏகாதிபத்திய நாடுகளில் தற்போது காணப்பட்டு வரும் பொறிவினால் இலங்கை முதலாளித்துவத்தின் நெருக்கடியானது கட்டுக்கடங்காது தீவிரம் அடைந்து உள்ளது.

இப்பாரிய அழிவினை தொழிலாள ஒடுக்கப்பட்ட மக்கள் மீது சுமத்துவதற்காக இராணுவ சப்பாத்தினுள் கீழ்ப்படுத்தி விடுவதை தவிர்ந்த வேறு ''தீர்வு'' எதுவுமே யூ. என். பி. — சிறீலங்கா சுதந்திர கட்சி முதலாளிகளிடம் கிடையாது வடக்கு கிழக்கில் இராணுவ [illegible] 3 கோடி ரூபாய்கள் வீதம் செலவழித்து ஜயவர்தன அரசாங்கத்தின் கைகளை இந்திய முதலாளித்துவ அரசாங்கம் விடுதலை செய்திருக்கும் சமயத்தில் 1988 வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் 957 கோடி ரூபாய்கள் இராணுவ பொலிஸ் அடக்கு முறை இயந்திரத்தை நடத்தும் முகமாக ஒதுக்கியமை, வடக்கு கிழக்கில் நடத்திய யுத்தத்தை தெற்கில் தொடர்ந்து நடத்துவதற்கான நினைவூட்டலே ஆகும். தற்போதே பாரிய இராணுவ பொலிஸ் படையை நாடெங்கும் கட்டவிழ்த்து விடவும் கொலை கைது செய்தல் சொத்துடமை அழிப்புக்கள் யூ. என். பி. அரசாங்கம் ஆரம்பித்து உள்ளது.

முதலாளித்துவ அரசின் பிணையாளராக இந்த எதிர்ப்புரட்சிக வேலைத்திட்டத்துக்கு சமசமாஜ கம்யூனிச — இ. தொ. கா. தலைமைகள் தோள் கொடுத்து உள்ளனர். இந்திய இலங்கை ஒப்பந்தம் மாகாண சபை சட்டம் என்பவற்றின் கீழ் காந்தி ஜயவர்தன அரசாங்கம் செயற்படுத்தும் எதிர்ப் புரட்சிகர வேலைத்திட்டங்களையும் இலங்கையின் தற்போதைய நெருக்கடியை தூண்டி உள்ள தீர்க்க முடியாத வரலாற்று பிரச்சினையையும் தமிழ் — தேசியத்தினதும் வறியவர்களதும் ஆதரவை தம்மால் அணி திரட்டி முதலாளித்துவத்திற்கு எதிராக எழுச்சியுறும் புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே தோற்கடிக்க முடியும்.

தேசிய இனத்தை நசுக்கி இனவாதத்தை தூண்டுதல் மூலம் சிங்கள — தமிழ் மக்களை வெட்டிச் சாயிக்கும் நிலைமையை உருவாக்கி சுய வர்க்க ஆட்சியை நடத்தும் பிற்போக்கு அரசியலை கொண்டுள்ள யூ. என். பி. சிறீலங்கா சுதந்திர கட்சி சிங்கள முதலாளித்துவங்களுக்கு எதிராக தமிழ் இனத்தின் தேசிய சுய நிர்ணய உரிமையை வழங்கி ஜனநாயக தொடர்புகளை நிறுவுவதற்கு தொழிலாள வர்க்கத்தினால் மட்டுமே முடியும். அங்ஙனமே சிங்கள இனவாத பிடைக்குள் ஆழ்த்தும் ஏனைய முதலாளித்துவ ஒடுக்கு முறைகள், கொடுமைகளுக்கு கிராமப்புற விவசாய மக்களையும் ஏனைய ஒடுக்கப்படுவோரையும் கீழ்ப்படுத்துவதை தகர்த்து விட அந்த வறியவர்களின் தலைவனாக தொழிலாள வர்க்கம் எழுச்சியுறுவதால் மட்டுமே சாத்தியம் ஆகும்.

(8 ம் பக்கம் பார்க்கவும்)

படிப்பகம்

www.padippakam.com



3

## 'வோல் ஸ்ரீட்' வீழ்ச்சியின் பின்னர்

# தொழிலாளர்களுக்கான முன்வழிப் பாதை

### 'புலடின்' ஆசிரிய குழு அறிக்கை

அக்டோபர் 19 ம் திகதிய பங்குச் சந்தையின் வீழ்ச்சியும், அதைத் தொடர்ந்து உலகம் பூராவும் உள்ள பங்குச் சந்தைகளிலும் அனைத்துலக நாணய அமைப்பிலும் உண்டான குழப்பங்களும் மாபெரும் மந்தத்தின் (1929) பின்னர் முதலாளித்துவத்தில் ஏற்பட்ட ஆழமான பொருளாதார நெருக்கடியின் வெடிப்பினைச் சுட்டிக் காட்டுகின்றது.

இந்த வீழ்ச்சியை தொடர்ந்து வோல் ஸ்ரீட்டில் என்ன தான் ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்ட போதிலும் உலக முதலாளித்துவம் ஒரு தீர்க்கமான திருப்பு முனையை ட்டி விட்டது. தனது சொந்த முரண்பாடுகள் காரணமாக முதலாளித்துவ அமைப்பு பொறிந்து போவதோடு, எதிர்வரும் மாதங்களில் அதன் தாக்கங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களிலும் உணரப்படும்.

தொழிலாள வர்க்கம், ஒன்றில் முதலாளித்துவ அராஜகத்துக்கும் குழப்பங்களுக்கும் ஒரு புரட்சிகர சோசலிச பதிலீட்டுக்காகப் போராட வேண்டும் அல்லது இலட்சோப லட்சம் தொழிலாளர்கள் 1930 பதுகளில் [illegible] மூதாதைகள் எதிர்கொண்ட பரந்த அளவிலான வேலையின்மைக்கும், பாண் கியூக்களுக்கும் முகம் கொடுக்க வேண்டி வரும்.

இந்தச் சரிவ ஒரே அடியாக 50,000 கோடி டாலர் பெறுமதியான முதலாளித்துவச் சொத்துக்களை அடித்துச் சென்று உள்ளது. அத்தோடு இந்நெருக்கடி பங்கு மாற்றச் சந்தை தொடக்கம் அனைத்துலக நாணய சந்தைகள் வரை பரந்துள்ளது. அங்கு டாலர், ஜப்பானிய யென்னுக்கும் ஏனைய வோல் ஸ்ரீட் முதலாளித்துவ போட்டியாளர்களின் நாணயங்களுக்கும் எதிராக புதிய மட்டத்துக்கு வீழ்ச்சி கண்டுள்ளது.

அக்டோபர் 28 புதன்கிழமை அன்று அமெரிக்க சமஷ்டி றிசேர்வ் வங்கி டலரின் வீழ்ச்சியை தவிர்க்கும் பொருட்டு நாணய சந்தைகளில் பிரமாண்டமான தலையீடுகளை நடாத்தும் வண்ணம் நெருக்கப்பட்டது. இது சரிவுக்கு மறு நாள் நிதி சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களில் தொடர்ச்சியான சரிவினைத் தடுக்கும் பொருட்டு எங்ஙனம் கடன் பத்திர சந்தைகளில் காலடி வைத்து கடன்களை வங்கிகளுக்கும், முகவர் இல்லங்களுக்கும் வழங்க நடடிவக்கை எடுத்ததை ஒத்திருந்தது.

வோல் ஸ்ரீட் சரிவின் தாற்பரியங்களை ஆரம்பத்தில் மூடி மழுப்பி வந்த பெரும் வர்த்தக நிறுவனங்களின் பேச்சாளர்களும், இன்று இது பொருளாதார வீழச்சியினுள் தலைமூழ்கிப் போவது தவிர்க்க முடியாதது என்பதை அங்கீகரிக்கின்றனர்.

'பிசினஸ் வீக்' சஞ்சிகை "சந்தை வீழ்ச்சியின் காரணமாக 1988 ல் பொருளாதாரப் பின்னடைவு நாடகப் பாணியில் ஏற்படும்: நிதிச் செல்வங்களின் அத்தகைய பேரழிவு, பொருளாதாரத்துக்கு நாசம் ஏற்படுத்துவதை தவிர்க்க முடியாது என்றது.

சரிவின் பரிமாணம், ஆளும் வர்க்கத்திற்கு இடையே குழப்பத்தையும், மனக் கிலேசத்தையும் உண்டு பண்ணி உள்ளது. 1987 அக்டோபர் 19 ம் திகதிக்கு முன்னைய நிலைமைகளுக்கு திரும்பிச் செல்வது பற்றிய பேச்சுக்கு இடம் இல்லை என்பதை அவர்களே ஒப்புக் கொள்கின்றார்கள்.

'பெடரல் றிசேர்வ் போட்', பொருளாதார வீழ்ச்சி, அதி உச்ச பணவீக்கம் என்ற இரட்டை ஆபத்துக்கு முகம் கொடுத்து உள்ளதை 'வோல் ஸ்ரீட் ஜேர்ணல்' ஒப்புக் கொண்டது. "பணயம் பேரளவிலானது. 'பெடரல் றிசேர்வ் போட்' வட்டி வீததை அதிகரித்த படி வைத்திருப்பின், அது 1930 ம் ஆண்டுகளின் தவறுகளை திருப்ப இழைப்பதுடன், சந்தை வீழ்ச்சியை பொருளாதார வீழ்ச்சியாகவும் திருப்புகிறது. ஆனால் அது வட்டி வீதத்தை அதிகம் வீழ்ச்சி காணச் செய்யின், அது டாலரை சுதந்திரமாக வீழ்ச்சி காணச் செய்யும். பணவீக்க அச்சத்தை கோலோச்சச் செய்யும். வெளிநாட்டு முதலீட்டாளர்களை அமெரிக்காவிலருந்து வெளியேறத் தூண்டும்".

'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை விமர்சனம். சமஷ்டி வரவு செலவுத் திட்டத்தின் மீதான இரண்டுங் கெட்டான் நிலையை சுட்டிக் காட்டியுள்ளது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை வெட்டத் தவறின் அது சந்தைகளில் பதட்டத்தை உண்டு பண்ணும் எனக் குறி பிட்டுள்ளது. வரிகளை அதிகரித்து செலவினங்களை வெட்டுவதானது 'இன்றைய பணச் சுருக்க போக்குக்களை மேசமாக்குவதோடு 20 ம் நூற்றாண்டின் இரண்டாவது மாபெரும் மந்த நிலையை உண்டு பண்ணவும் முடியும்" என்றுள்ளது.

## ஏழனம்

நிதிச் சரிவு நிலைமைகளின் கீழ் இலாப முறையைப் பேணுவதற்கான சிறந்த வழி என்ன என்பதில் தமக்கு இடையே மோசமாகப் பிளவுண்டு நின்ற போதிலும் முதலாளித்துவ வர்க்கம் அமெரிக்கத் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராகக் கடும் தாக்குதல்களை தொடுக்க கோருவதில் ஐக்கியப் பட்டு உள்ளது. முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடிக்கு இட்டுக் கட்ட தொழில்கள் வாழ்க்கைத் தரம், சமூக வேலைத்திட்டங்களை வெட்டிச் சரிக்க வேண்டியுள்ளது.

'கிறிஸ்லர் கோபரேசன்' தலைவர் லீ இயகோகாவிடம் இருந்து முனைப்பான கருத்து வெளிப்பட்டு உள்ளது. 3,500 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ய வேண்டும் என அவர் பத்திரிகையாளர் மகாநாட்டில் அறிவித்து உள்ளார். சமஷ்டி வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை 2,300 கோடி டாலர்களால் குறைப்பதன் மீதான காங்கிரசுக்கும் வெள்ளை மாளிகைக்கும் இடையேயான பேரம் பேசல்களை அவர் ஏழனம் செய்தார். அக்டோபர் 19 ல் உலகப் பங்குகளின் பெறுமானத்தில் அடித்துச் செல்லப்பட்ட 1 ரில்லியன் டாலர்களுடன் ஒப்பிடும் இடத்து இது ஒரு வாளித் தண்ணீரில் ஒரு துளி மட்டுமே என அவர் குறிப்பிட்டு உள்ளார்.

அவர் வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறையில் செலவு வெட்டு, வரி அதிகரிப்பு இரண்டும் இணைந்த வகையில் உடனடியாக 10,000 கோடி டாலர்கள் வெட்டப் பட வேண்டும் என்று உள்ளார்: கிறிஸ்லரில் தான் செய்யும் தொழில் வெட்டு ஒரு மாதிரியாக வேண்டும். 'இங்கு தான் நாம் சிரமம் எடுத்து உள்ளோம், என அவர் பிரகடனம் செய்து உள்ளார். 'அவர்களுக்கு பேரழிவைத் தடுப்பது அவசியமானால் அவர்கள் இதனை வாஷிங்கடனில் இன்றே செய்யட்டும். நான் கருதுவது சில அடையாள வெட்டுக்களை அல்ல என்றார்."

வோல் ஸ்ரீட்டின் கட்டளைகளுக்கு முதலாளித்துவ அரசின் பிரதி[illegible]ப்பை ஒவ்வொரு [illegible]யும் கவனத்தில் [illegible]டும்: இந்தச் சரிவின் ஒரு சில நாட்களுக்குள் வெள்ளை மாளிகையில் ஒரு முழு அளவிலான வரவு செலவுத்திட்ட உச்சி மகாநாடு கூட்டப்பட்டது. இதில் றீகன் நிர்வாகம், காங்கிரசில் உள்ள ஜனநாயக, குடியரசுக் கட்சிகளின் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

பங்குச் சந்தையினதும், வங்கிகளதும் கோரிக்கையின் பேரில் இந்த முதலாளித்துவ அரசியல் வாதிகள் சமஷ்டி வரவு செலவுத் திட்டப் பற்றாக் குறையை வெட்டிச் சரிக்க முழு அளவில் முயற்சி செய்வதாக வாக்குறுதி அளித்தனர். பங்கு சந்தை ஊகக்காரர்கள் பெரும் முதலீட்டு வங்கிகள், முகவர் இல்லங்கள் ஆகியனவற்றை காக்க பெடரல் றிசேர்ப் போட்டில் இருந்து கோடானு கோடி டாலர்கள் உடனடியாக வழங்கப்பட்டன.

## அம்பலம்

இலட்சோப லட்சம் தொழிலாளர்களதும் அவர்களது குடும்பங்களதும் சமூக நிலைமைகள் சீர்கெட்டுப் போயுள்ளது கடைசியாக வெளியான வைத்திய அறிக்கைகளின் படி மாதாந்தம் 2 கோடி மக்கள் பட்டினி கிடக்கின்றனர். பக்டரி தொழிலாளர்கள் கதவடைப்புக்களுக்கும் வேலை நீக்கங்களுக்கும் முகம் கொடுக்கையில் விவசாயிகள் அடிமைச் சீட்டு நிலையை எதிர் கொள்கின்றனர். இவற்றால் காங்கிரசும் வெள்ளை மாளிகையும் அசைந்து கொடுப்பதாய் இல்லை. முதலாளித்துவ 'ஜனநாயகம் என்ன விதத்தில் அம்பலமாகி, குற்றச் சாட்டுக்கு இலக்காகியுள்ளது!

முதலாளித்துவ அமைப்பை காக்கும் தியாகங்களுக்கான சகல கோரிக்கைகளையும் தொழிலாள வர்க்கம் அடியோடு நிராகரிக்க வேண்டும். வோல் ஸ்ரீட் சரிவை தொடர்ந்து இலாபமீட்டலும், ஊகங்களும் முரட்டுத்தனமாக அதிகரிக்கையில் தொழிலாளர்கள் தமது வாழ்க்கைத் தரம் தொடர்ந்து வீழ்ச்சி காண்பதை காண்கின்றனர்.

பங்குச் சந்தையின் வீழ்ச்சியானது றீகன் நிர்வாகத்தின் கொள்கைகளில் பெரும் வர்த்தக ஏகபோகங்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையீனத்தின் வெறும் வெளிப்பாடு மட்டும் அல்ல என்பதை ஒவ்வொரு தொழிலாளியும் நனகு விளங்கிக் கொண்டாக வேண்டும். இது உலக முதலாளித்துவ அமைப்பில் உள்ள அடிப்படையான முரண்பாடுகளின் விளைவாகும்.

1987 அக்டோபரில் மேலரங்குக்கு வெடித்துக் கிளம்பிய நெருக்கடி முதலாளித்துவத்தின் கீழ் கட்டி எழுப்பப்பட்ட உற்பத்திச் சக்திகள் உற்பத்திச் சாதனங்களின் தனிச் சொத்துடமை சமூக உறவுகளுக்கும், இலாபத்தின் அடிப்படையிலான உற்பத்திக்கும் எதிரான கிளர்ச்சியை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

எழுவர் குழுவின் பொருளாதார உச்சி மகாநாடுகள் கூட்டங்களின் சகல பக்கச் சார்பான அறிவிப்புக்களுக்கு இடையேயும் பெரும் முதலாளித்துவ நாடுகள் தமது பொருளாதார கொள்கைகளை ஒருங்கிணைக்க முடியாதுள்ளன. உலகப் பொருளாதாரத்தின் அராஜகப் போக்கினை ஒழுங்கு செய்ய இயலாது உள்ளன. உலகப் பொருளாதாரம் முதலாளித்துவ தேசிய அரசு எல்லைகளால் தன் மீது திணிக்கப்பட்ட வரையறைகளுடன் சீர் செய்ய முடியாது மோதிக் கொண்டுள்ளது.

இது, காலம் தாழ்த்தி வந்த அமெரிக்க முதலாளித்துவத்தின் வரலாற்றுத் தளர்ச்சியை வெளிக் காட்டியுள்ளது. ஒரு காலத்தில் உலகப் பொருளாதாரத்தில் தான் கொண்டிருந்த முதன்மை ஸ்தானத்தை அது இழந்து விட்டது. உள்ளூர் சந்தையில் கூட அது பலவீனமடைந்து வருகின்றது.

இந்நெருக்கடிக்கு உற்பத்தி சாதனங்களின் முதலாளித்துவ தனியார் சொத்துடமை கட்டுமானத்துள்ளும், அமெரிக்க முதலாளித்துவத்தின் "தேசிய நலன்களை" காப்பதன் மூலமும் தீர்வு காண முடியாது.

## தீர்வு

தொழிலாள வர்க்கம் இராட்சத வங்கிகளதும், கூட்டுத்தாபனங்களதும் இழப்புக்களின் மூலம் தொழில்கள், வாழ்க்கைத் தரங்கள், சமூக சேவைகளை காக்க நெருக்கடிக்குத் தனது சுயாதீனமான தீர்வினை முன்வைக்க வேண்டும்.

தொழிலாளர்கள் உடனடியாக தொழிலாளர் காங்கிரசினைக் கூட்டும் படி கோர வேண்டும். இவை உயர்மட்ட அதிகாரத்துவத்தையன்றி

(7 ம் பக்கம் பார்க்கவும்)

படிப்பகம்

www.padippakam.com





4

# இந்திய மக்கள் முன்

## ● சி. பீ. ஐ. [எம்] சி. பீ. ஐ. ஸ்டாலினிச தலைமைகள் முதல

## ● இந்தத் தலைமைகளை ஒரு தொழிலாளர் — விவசாயிகள் அரசா

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) இந்திய கம்யூனிஸ்ட் (சி. பீ. ஐ.) கட்சிகளின் துரோக ஸ்டாலினிஸ்ட் தலைமைகள் 'காங்கிரசுக்கு பதிலீடாக ஒரு தேசிய அரசாங்கம்' அமைக்க நாடு தழுவிய தீவிர பிரச்சாரத்தினை தொடுக்கப் போவதாக சி. பீ ஐ. (எம்) பொதுச் செயலாளர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் டெல்லியில் அறிவித்துள்ளார்;

இந்த மக்கள் முன்னணி அரசியல் — முதலாளித்துவ வர்க்க எதிரியுடன் ஒரு வர்க்க கூட்டு அரசாங்கம் அமைக்கும் கொள்கை — சில்லியிலும், இந்தோனேசியாவிலும் அந்நாடுகளின் ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சிகளால் கடைப்பிடிக்கப்பட்டது

இது 1965 ல் இந்தோனேசியாவிலும், 1973 ல் சில்லியிலும் இலட்சோப லட்சம் தொழிற் சங்கவாதிகள், தொழிலாளர்கள், கம்யூனிஸ்டுகள் ஏனைய தொழிலாளர் வர்க்க கட்சிகள், இயக்கங்களின் ஆதரவாளர்களின் இரத்தம் தோய்ந்த படுகொலைகளுக்கும், எதிர்ப் புரட்சியின் வெற்றிக்கும் இட்டுச் சென்றது.

செப்டம்பர் (1987) நடுப்பகுதியில் இடதுசாரிக் கட்சிகள் எனப்படும் சி. பீ. ஐ. சி. பி. எம் கட்சிகளின் ஸ்டாலினிச தலைமைகளும், புரட்சிகர சோசலிசக் கட்சி, போவாட் புளக்கும் தொடுக்கவுள்ள நாடு தழுவிய பிரச்சார இயக்கம் ஒரிசா, மகாராஷ்டிரா, ஜம்மு காஷ்மீர் மாநிலங்களில் வரட்சியால் இடம் பெறும் நூற்றுக்கணக்கான பட்டினிச் சாவுகளை நிறுத்திவிடாது.

இது, இக்கொடூரக் காட்சிகள் ஏனைய மாநிலங்களுக்குப் பரவுவதைத் தடுக்கவோ அல்லது அடுத்த சில மாதங்களில் இந்த பலியெடுப்புக்கள் நூறுகளிலிருந்து ஆயிரங்களாக அதிகரிப்பதை நிறுத்தவோ போவதில்லை.

அவ்வாறே இந்த ஸ்டாலினிச தலைமைகள் தொடுக்க உத்தேசித்துள்ள பிரச்சார இயக்கமோ அல்லது 'தேசிய அரசாங்கமோ' வரட்சியின் பிடியல் அகப்பட்டு உள்ள நாட்டின் 25 மாநிலங்களுள் 21 மாநிலங்களின் நெல் வயல்களுக்குப் பசளையிடும் கால்நடைகளன் மரண எண்ணிக்கையை நிச்சயம் நிறுத்தப் போவதில்லை.

அவர்களின் பிரச்சாரத்தின் மூலம் காய்ந்து சுருக்கேறிடிய முகங்களோடும், வெறும் வயிறுகளோடும் குடிதண்ணீர் இல்லாமலும் வான் பார்க்கும் விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு ஏதும் வழி பிறக்குமா? ஒரு போதும் இல்லை.

மார்ச் (1987) மாதத்தில் இருந்து மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்டங்களின் விலைகள் இரண்டு, மூன்று, நான்கு மடங்காக அதிகரிக்கத் தொடங்கி விட்டன.

இன்று வரை தமது பணத்தினை நிறுவனப் பங்குகளிலும் சொத்து ஊகங்களிலும் முதலீடு செய்து வந்த 'பண மூட்டைகளின்' கண்கள் இலாப வீதத்தை பெருக்க பிணம் தின்னும் கழுகுகளைப் போல் நாட்டுப் புற ஆடுகள், மாடுகளிலிருந்து அரிசி கோதுமை, சமையல் எண்ணெய் பக்கம் திரும்பி உள்ளது.

மத்திய அரசாங்கம் தனது ஐந்தாண்டு திட்டங்களுக்கு வருடாந்தம் 200,00 கோடி ரூபாக்களை ஒதுக்கீடு செய்கையில் கறுப்பு பணத்தின் திரட்சி வருடாந்தம் 40,000 கோடி ரூபாக்களாக உயர்ந்தது என மாஜி. நிதி அமைச்சர் வி. பி. சிங் குறிப்பிட்டுள்ளார்.

அதுமட்டும் அன்றி சிங் மேலும் கூறியதாவது: ''ஆளும் கட்சிக்கும் பெரும் வர்த்தக நிறுவனங்களுக்கும் இடையே தொடர்புகள் இருந்து வருகின்றன இது ஜனநாயகத்துககு முரணானது. எனினும் அரசாங்கம் கருணை காட்டும் கொள்கையை கடைப் பிடிக்கின்றது. அத்தோடு ஒரு வகையான சமரசப் போக்கும் நிலவி வருகின்றது''.

பெரும் முதலாளித்துவப் பத்திரிகைகளால் 'காந்தி அரசாங்கத்துக்கு எதிராக தீவிரமாகப் போராடும் ஒரு மனிதனாக' வரவேற்கப்பட்டு முன்னணிக்கு கொணரப்பட்டுள்ள இந்த வீ. பி. சிங், சீ பீ. ஐ. (மார்க்சிஸ்ட்) செயலாளரால் பின்வருமாறு புகழப்பட்டார்:

''மாஜி நிதி அமைச்சர், காங்கிரஸ் கட்சியில் உள்ள வர்களை கிளர்ச்சி செய்யும் படி கேட்டுக் கொண்டுள்ளார். ஊழல் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க அவர் விரும்புகிறார். உட்கட்சி ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் கட்சியை யில் இருந்து அக அவர் கோருகிெ அவரது சக

லீக், சிவசேனை, பாரதீய ஜனதா போன்ற இனவாத கட்சிகளுடனான காங்கிரஸ் கட்சியின் உறவுகளுக்கு எதிராக குரல் கொடுக்கின்றனர்.

''அவர் மதச் சார்பற்ற ஒரு அரசியல் சட்டத்தைக் கோருகின்றார். அவர் கைத் தொழில்களின் நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கு பற்றல் போன்ற சில தீவிரவாத நடவடிக்கைகளை விரும்புகின்றார். அத்தோடு அவர் எமது மக்களின் வாழ்வில் பயங்கர உருவெடுத்துள்ள வரட்சி பிரச்சினை பற்றியும் பேசுகிறார்.

''இந்த விவகாரங்கள் அனைத்தும் அவரால் எழுப்பப்பட்டு உள்ளன. இந்த விவகாரங்களில் காந்தி அரசாங்கத்தை எதிர்த்தாக வேண்டும் எதிர்க்கவும் முடியும். இந்தப் போராட்டம் ஒரு அரசியல் போராட்டம் அன்றி எவ்விதத்திலும் ஒரு கோஷ்டி போராட்டம அன்று.''
('காங்கிரஸ் ஆட்சியை அகற்றுவோம்' — துண்டுப் பிரசுரம் — பக்கம் — 13 — 14)

இறுதியில் ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் காங்கிரஸ் கட்சியில் இருந்து கழன்றவர்களும் — வீ. பி. சிங் போன்றவர்கள் — ஒரு பொது அரசியல் மேடையை அமைத்து உள்ளனர். 'சோசலிசப் புரட்சியின் உயிராபத்து எதிரிகளான முதலாளி வர்க்கத்தினராலும் அவர்களது பத்திரிகைகளாலும், ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களாலும் ஆரவாரத்துடன் வேற்கப்பட்ட வீ. பி. சிங்கின் 'காந்தி எதிர்ப்பு' கண்டனங்களின் உள்ளடக்கத்தினை எந்தவொரு வர்க்க நனவுள்ள தொழிலாளியும் இனங் கண்டு கொள்வான்.

விவசாய மாநிலமான ஹரியானாவில் சமீபத்தில் இடம் பெற்ற தேர்தலில் நாட்டின் ஜனத் தொகையில் பெரும் பான்மையினராக விளங்கும் ஏழை விவசாயிகள், முதலாளித்துவ காங்கிரஸ் ஆட்சியாளர்கள் மீதான தமது வெறுப்பை வெளிக் காட்டினர்.

தேவிலால் தலைமையிலான முதலாளித்துவ லோக்டால் கட்சி ஆளும் காங்கிரஸ் கட்சியை ஏறக்குறைய துடைத்துக் கட்டிய பா. — ஏகப் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியைக் கைப் பற்றியது.

ஏழை விவசாயிகளின் 2.27 பில்லியன் கடன்களை ரத்துச் செய்வோம் என்பதே லோக்டால் கட்சியின் முக்கிய தேர்தல் வாக்குறுதியாகும் என்பது சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.


முதலாளித்துவ காங்கிரஸ் கட்சியின் பல தசாப்த கால ஆட்சி, வேலையற்றோரின் எண்ணிக்கையை 10 கோடிக்கும் மேலாக அதிகரித்துள்ளது. 42 கோடி மக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்ந்து கொண்டு உள்ளனர். 120,000 கைத்தொழில்கள் 'நோய் அலகு' களாக பிரகடனம் செய்யப்பட்டு மூடப்பட்டு உள்ளன.

### கூலமைகள்

நாட்டுப் புறங்களில் விவ

சாயத் தொழிலாளர்கள் ச்சுவாந்தர்களால் முரட் தனமாக சுரண்டப்பட் அடகு வைக்கப்பட்ட தொ ழிலாளர்கள் ஆக்கப்பட் னர். தமது உற்பத் பொருட்களுக்கு நியாய வி யை பெற்றுக் கொள்ள மு யாத ஏழை விவசாயி, தமது தலைக்கு மேல் பிர ண்டமான வங்கிக் கட சுமைகள் தொங்கிய வ னம் கொள்வனவுச் ச யையும் இழந்து உள்ள

செப்டம்பர் இரண்ட வாரத்தில் இந்தத் தாக் ல்கள் அனைத்துக்கும் எதிர இடம் பெற்ற நாடு த விய எதிர்ப்பியக்கத்தில்



இந்திரா காந்தியின் அவசரகால ஆட்சியில் வேலை நிறுத்தங்களுக்கு எதிரான அரசின் வேட்டை

இலட்சம் விவசாயத் தொ ழிலாளர்கள், ஏழை விவ யிகள் பங்கு கொண்டன

இந்திய முதலாளித்து அரசாங்கம் ஏகாதிபத் வங்கிகளிடம் இருந்து 285 பில்லியன் ரூபாக்களை க ளைப் பெற்று உள்ள இந்தக் கடன்களுக்கான டாந்த வட்டிக் கொடு னவு ரூபா. 6.7 பில்லிய கள். இது நாட்டின் தேசி வருமானத்தில் 20 சதவீத ஆகும். 1987 — 88 ம் ஆ டுக்கான வரவு செலவு திட்டப் பற்றுக்குறை 8,8 கோடி ரூபாககள் ஆகும்.

இந்திய முதலாளி வர்க்க சார்ந்துள்ள உலக ஏகாதி த்திய வங்கிகள் பேரளவி ன நிதி நெருக்கடிக்கு உ ளாகி உள்ளன. பல லத்தி அமெரிக்க நாடுகளுள் பி சிலும் மெக்சிக்கோவும் ம டும் 20,000 கோடி டால க்ன் கடன் பெற்றுள்ள

www.padippakam.com







# ணிக்கு இடமளியாதே!

## ந்துவ வர்க்க எதிரியுடன் மக்கள் முன்னணி அமைப்பதை நிராகரி!

## ந்துக்கு சுயாதீனமாக போராடக் கோரு!

ரேசில் இன்னுமோர் 4 வரு ங்களுக்கு வட்டிக் கொடு பனவை இடை நிறுத்தி ள்ளது.

### சிக்கன நடவடிக்கை

அநேக லத்தின் அமெரிக்க நாடுகள் தமது தேசிய வரு மானத்தில் பெரும் வீதத் தை வட்டி கொடுப்பனவுக்கு என ஒதுக்கீடு செய்கின்றன. இதைத் தொடர்ந்து இந்நா டுகளின் ஆட்சியாளர்கள் தொழிலாளர்கள், விவசாயிக ளின் வாழ்க்கைத் தரத்தை வீழ்த்தும் கடுமையான சிக் கன நடவடிக்கைகளை திணி க்கின்றனர்.

உலகச் சந்தையில் தனது பிடியை இழந்ததன் பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியம், ஜப்பானிய, ஐரோப்பிய, ஏகாதிபத்தியங்களுக்கு எதி ரான கடும் வர்த்தக யுத்த த்தில் ஈடுபட்டுள்ளது. ஜப் பானுடனான அமெரிக்க வரு டாந்த வர்த்தகப் பற்றுக் குறை 5,070 கோடி டால ர்களை எட்டி உள்ளது. சம ஷ்டி வரவு செலவுத் திட் டம் கூட வெளிநாட்டுக் கடன்காரர்களாலேயே நிதியீ ட்டம் செய்யப்படுகின்றது.

அமெரிக்கா இன்று பெரும் கடனாளி நாடாகி உள்ளது. அமெரிக்கா நிகரகுவா, ஈரா னுக்கு எதிரான ஆத்திர மூட்டும் யுத்தத்தில் ஈடுபட் டுள்ளது: இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் ஏனை ய ஏகாதிபத்திய நாடுகள தும் வரலாற்று உரித்தான அரசியல், பொருளாதார நெ ருக்கடியின் நல்ல வெளிப்பா டுகளாகும்.

உலகப் பொருளாதார நெ ருக்கடியின் தாக்கங்கள் இந்தி யாவிலும் வெளிப்பட்டு உள் ளன. இந்திய முதலாளிகளின் உற்பத்திப் பண்டங்களுக்கு ஏனைய முதலாளித்துவ போ ட்டியாளர்களுடன் போட்டி யிடும் அளவுக்கு உலகச் சந் தையில் கேள்வி இல்லை. இவ்வாறே உள்ளூர் சந்தை யில் பெரும்பான்மை மக்க ளின் கொள்வனவுச் சக்தியின் வீழ்ச்சியால் அவை வர்த்தக நிலையங்களில் குவிந்து போ ய் கிடக்கின்றன. இதன் விரதி பலனாக மேலும் ஆயி ரக் கணக்கான பக்டரிகள் மூடப்படும் ஆபத்து ஏற்பட் டுள்ளது.

வட்டிக் கொடுப்பனவுகளை திரட்டும் பொருட்டு ஏகாதி பத்திய வங்கியாளர்கள் தொ ழிலாளர்களை மிலேச்சமான முறையில் சுரண்டும் கடும் சிக்கன நடவடிக்கைகளை இந் திய அரசாங்கத்தின் ஊடாக அமுல் செய்து வருகின்றனர் இந்தத் தாக்குதல்கள் நகர ங்களிலும் அத்தோடு நாட் டுப் புறங்களிலும் வர்க்கப் போராட்டத்தை உக்கிரம் அடையச் செய்துள்ளது.

இந்திய முதலாளி வர்க்க த்தின் முக்கிய கட்சியான ஆளும் காங்கிரஸ் கட்சியின் கீழும் முதலாளித்துவ அர சின் கீழும் இனவாதப் படு கொலைகள் பன்மடங்கு அதி கரித்து உள்ளன. ஒது மூரு ட்டில் முஸ்லிம் மக்களுக்கும் பஞ்சாபில் சீக் மக்களுக்கும் எதிரான ஹிந்து இனவாத

தகைய ஒரு நிலைமை ஏற் படாமல் தடுப்பதே, உயிர் நீத்துக் கொண்டுள்ள முத லாளித்துவ அமைப்பினைக் காக்கும் பொருட்டு பாரா ளுமன்றப் போராட்டத்தை ஒரு மாற்று 'தீர்வாக' முன் வைப்பதே சிங்கின் நோக்கம். ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் இத ன்படி செயல்பட்டு வருகின் றனர்.

மாஜி. ஜனாதிபதி ஷெயில் சிங்குக்கும் ராஜீவ் காந்திக் கும் இடையேயான தகரா றில் கம்யூனிஸ்ட் கட்சி தலை வர்கள் உரத்த குரலில் கூறி யதாவது: ''ஜனநாயக ரீதி யில் தெரிவு செய்யப்பட்ட ராஜீவ் காந்தியின் அரசாங் கம் ஜனாதிபதியால் தள்ளு படி செய்யப்படுவதை நாம் அனுமதிக்கப் போவதில்லை''

ரக் கொள்கைகள் ஆதியன மனித ஜீவன்களின் நலன்களும் கெட்டதுமான ஒழுக்கங்க ளில் இருந்து தோன்றுவன போல் காட்டுவதே! இந்த ஒழுக்கவியலாளர்களைப் பற்றி ருஷ்யப் புரட்சியின் இணைத் தலைவரான லியோன் ட்ரொ ட்ஸ்கி எழுதியதாவது:

''நான்காம் அகிலம் சர்வ ரோக நிவாரணிகளை தேடுவ தும் இல்லை. கண்டு பிடிப்ப தும் இல்லை. அது முற்றி லும் மார்க்சிசத்தின் அடிப் படையிலேயே தனது நிலைப் பாட்டினை கொண்டுள்ளது ஒரே புரட்சிகரக் கோட்பாடு என்ற முறையில் அது ஒரு வர் யதார்த்தத்தை புரிந்து கொள்ளவும், தோல்விகளுக் குப் பின்னால் உள்ள காரண ங்களை கண்டு பிடிக்கவும், வெற்றிக்கு நனவாகத் தயார்

## இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் அறிக்கை


த்தின் அடிப்படையில் நிறு வப்பட்டது. இவற்றின் பின் னணியில் பொலிஸ், இரா ணுவம், காங்கிரஸ், ஆர் எஸ். எஸ் ஆயுதக் குண்டர் கள் இருந்து வருகின்றனர் என்பது நன்கு பிரசித்தம். இந்தச் சம்பவங்களால் உழைக்கும் மக்களில் பெரும் பான்மையினரின் வெறுப்பினை அரசாங்கம் ஈட்டிக் கொண் டுள்ளது.

நூற்றுக் கணக்கான மக்க ளின் உயிர்களைப் பலிகொண் டுள்ள வரட்சி முதலாளி வர்க்கத்தின் உயிராபத்து நெருக்கடியை ஆழமாக்கியுள் ளது. இந்நிலைமைகளின் கீழ் வீ. பி. சிங் இடதுசாரிக் கட்சி களை (ஸ்டாலினிஸ்டுகள்) தனது இயற்கையான சகா க்களாகப் பிரகடனம் செய் தார். ஆளும் முதலாளி வர் க்கம் தொடர்பாக நகர்ப் புற, நாட்டுப்புற பல இல ட்சம் உழைக்கும் ஜனத்தொ கை கொண்டுள்ள வெறுப்பு, விசனங்களோடு தன்னை 'இன ங்காட்டிக் கொள்ளும்' சுலோகங்களை எழுப்புகின்றார்.

ஜனதா கட்சியின் ஒரு தலைவரான பிஜு பட்நாய்க் கூறியது போன்று ''பட்டி னியால் வாடும் மக்களை கிளர்ந்து எழுந்து, ஆட்சியா ளர்களை பலாத்காரமாக தா க்கி எறியும் படி'' அழை ப்பு விடுக்கும் வீ. பி. சிங் கின் ''போராட்டம்'', அத்

அத்தோடு ''நாம் ஜனநாய கத்தையும் அரசியல் அமை ப்புச் சட்டத்தையும் பேணு வோம்'' என்றனர்.

ஆனால் இந்நிலைப்பாடு, வர் க்கப் போராட்டத்தின் சூட் டினால் விடிவதற்குள் மாற் றம் அடைந்தது. தபால் தொழிலாளர்களின் முழு அளவிலான வேலை நிறுத்தப் போராட்டத்தில் இருந்து



ராஜீவ் காந்தி

பல்கலைக்கழக, கல்லூரி ஆசி ரியர்களின் ஒரு மாத கால வேலை நிறுத்தம் வரை கா ட்டிக் கொடுத்த இந்த ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட் சியின் அயோக்கியர்கள், இன்று இடைத் தவணை தேர்தலை கோரிவருகின்றனர்!

கம்யூனிஸ்ட் கட்சித் தலை வர்கள் வீ. பி. சிங்குடன் இணையக் காரணம், ஊழல்' வகுப்புவாதம், பொருளாதார

செய்யவும் உதவுகின்றது:

''நான்காம் அகிலம், ஆட் சியை கைப்பற்றுவது எப்படி என்பதை பாட்டாளி வர்க் கத்துக்கு முதலில் காட்டிய போல்ஷிவிசத்தின் பாரம்பரி யங்களை தொடர்ந்து கடை ப்பிடிக்கின்றது.

''நான்காம் அகிலம், அரை வைத்தியர்கள் போலிகள், வேண்டத் தகாத ஒழுக்க ஆசான்களை துடைத்துக் கட் டுகின்றது. சுரண்டலை அடிப் படையாகக் கொண்ட ஒரு சமூகத்தில் சமூகப் புரட்சி யின் ஒழுக்கமே உயர்ந்தது.

''தொழிலாளர்களின் வர் க்க நனவை உயர்த்துகின்ற தும், தமது சொந்த சக்தி களில் நம்பிக்கை வைக்கின் றதும், போராட்டத்தில் சுய தியாகத்துக்கு ஆயத்தமானது மான சகல விதிமுறைகளும் சிறப்பானவை. தமது ஒடுக் குவோரின் முன்னிலையில் ஒடு க்கப்படுவோரிடையே அச்சம் அடிபணிவுகளை திணிக்கும் விதிமுறைகளை அனுமதிக்க முடியாது; இவை எதிர்ப்பு, வெறுப்புக்களை நசுக்குகின் றன. அல்லது வெகுஜனங்க ளின் விருப்புக்குப் பதிலாக தலைவர்களின் விருப்பினை பதிலீடு செய்கின்றன.

''எனவே தான் மார்க்சி சத்தை வேசையாட்டத்துக்கு பயன்படுத்தும் சமூக ஜனநா யகம், போல்ஷிவிசத்தின்

எதிரிடையான ஸ்டாலினிசம் இரண்டும் பாட்டாளி வர்க் கப் புரட்சிக்கும், அதன் ஒழு க்கத்திற்கும் உயிராபத்து மிக்க எதிரிகளாகும்'':

('இடைமருவு வேலைத்திட் டம்' — லேபர் பிரசுரம் பக் கம் — 38 — 39)

4 லட்சம் அங்கத்தவர்க ளையும், 2 கோடி ஆதரவா ளர்களையும் கொண்ட இந்தி யாவின் இரண்டாவது பெ ரும் கட்சி என ஜம்பம் அடித்த படி சி. பி. ஐ. (மா ர்க்சிஸ்ட் கட்சியின் செயலா ளர் நம்பூதிரிபாத் கூறியதா வது: ''மதச்சார்பற்ற ஏனைய எதிர்கட்சிகளுடன் உடன்பாடு கொண்டிருக்க வேண்டி உள் ளதால் நாம் சுயாதீனமாக செல்ல விரும்பவில்லை. எமது நோக்கம் ஒரு பொது இய க்கத்தை விருத்தி செய்வதே. நாம் அந்த இலக்கில் சென் று கொண்டிருக்கின்றோம்.'' ('ஹிந்து' — செப்டம்பர் 10

தனியார் சொத்தை ஒழி க்கத் தனது கட்சிக்கு வேலை த்திட்டம் கிடையாது என் பதைக் கூற முதுகெலும்பு இல்லாத நம்பூதிரிபாத் ஒரு புதிய சக்தி(!) நாட்டில் உருவெடுத்து வருவதாகவும், அச்சக்திகள் ஐக்கியப் படுத் தப்பட வேண்டும், ஐக்கியப் படுத்த முடியும் என்று உள் ளார். ''இந்தப் புதிய சக் திகளில் ஒன்று இடதுசாரி கட்சிகள்(!) இரண்டாவதாக காங்கிரஸ் தலைமைக்கு எதி ராக கிளர்ச்சி செய்யும் கா ங்கிரஸ் காரர்களுக்கும், இன வாத சக்திகளுக்கும்(!!) இடையேயான தொடர்புகள் மூன்றுவதாக பீ; ஜே.பீ. (பாரதீய ஜனதா கட்சி) முஸ்லிம் லீக் போன்ற இன வாதச் சக்திகளுடனான சந் தர்ப்பவாதக் கூட்டுக்களுடன் எதிர்க்கட்சிகளிலுள்ள இட துசாரி அல்லாத சக்திகள் மனமுறிவு கண்டுள்ளன''. ( காங்கிரஸ் ஆட்சியை நீக் குவோம்' — பக்கம் — 30)

முதலாளித்துவக் கட்சிகளு டனான ஸ்டாலினிச மக்கள் முன்னணிக் கோலத்தை இங்கு நீங்கள் காண்கிறீர் கள். இந்த ஸ்டாலினிச வே டதாரிகள் தாம் 'காங்கிரஸ் அரசாங்கம் கடைப்பிடிக்கும் முதலாளித்துவ் அபிவிருத்தி பாதையை அடிப்படையில் எதிர்ப்பதாகவும்'! முழங்குகி ன்றனர். ('பீபிள்ஸ் டெமோ கிரசி — செப்டம்பர் — 13 ஆனால் பாராளுமன்ற விதி முறைகளினூடாக எப்படி? முதலாளித்துவக் கட்சிகளுட னான கூட்டினாலா?

இந்தியா உட்பட அனைத் துலக ரீதியில் இந்த ஸ்டா லினிச கட்சிகள் கொலைகா ரத் தனமான மக்கள் முன் னணி அரசியலையும், 'சோச

(6 ம் பக்கம் பார்க்கவும்)

படிப்பகம்

www.padippakam.com



# அரசியல் கைதிகளாக 260 தோட்டத் தொழிலாளர்கள்!

இ. தொ. கா, லங்கா சமசமாஜ கட்சி கம்யூனிச கட்சி தலைமைகள் இந்திய — இலங்கை ஒப்பந்தத்திற்கு ஆதரவு வழங்கி ஜயவர்தனா அரசாங்கத்திற்கு பக்கபலமளிக்கும் சமயத்தில் தோட்டத்துறையில் 260 தொழிலாளர் கைதிகளாக காலம் கழிக்கின்றனர்.

இளைஞர்கள் பெரும்பாலானோர் அடங்கிய இந்த அரசியல் கைதிகள், ''பயங்கரவாத தடைச் சட்டத்தின்'' கீழ் யூ. என். பி. அரசாங்கத்தால் கடந்த ஒன்றரை வருட காலத்துள் வேட்டையாடப்பட்டோராவர். அரசாங்கத்தின் வேட்டையால் தொழிலாளர் அதிருப்திவலுக்கையில் இ. தொ. கா. வின் தொண்டமான் — செல்லசாமி தலைமை பொலிசாரை நேரடியாக பயன்படுத்தாது தமது சங்கத்திற்கு பெயர்ப் பட்டியலை தந்து சங்கத்தின் ஊடாக கைது செய்யுமாறு ஜயவர்தனாவிடம் கோரினர்.

கடந்த மார்ச் மாதத்தில் கண்டியில் நடந்த இ. தொ. கா. மகாநாட்டின் போது இந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்ட போது ஜயவர்தனா அதனை நிராகரித்துள்ளார்.

பிரஜா உரிமைக்காகவும் இனவாத ஆத்திர மூட்டல்களுக்கு எதிராகவும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் போராட்டம் எழும் போது அவற்றை நிறுத்தி பிரார்த்தனை இயக்கம் எனப்படுவதற்குள் கரைத்து விடவே இ. தொ. கா. தலைமைத்துவம் வேண்டுமென்று செயற்படுகின்றது.

இந்த துரோகத்தை மூடி மறைக்கும் பொருட்டு சில தினங்களுக்கு முன் ஹட்டனில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய தொண்டமான் அரசியல் கைதிகளின் பிரச்சினையையிட்டு ஜனாதிபதி ஜயவர்தனாவைச் சந்தித்துள்ளதாக தொழிலாளர்களுக்கு தெரிவித்தார். தொண்டமானை பொய்யாக விமர்சிக்கும் போது தோட்டத்துறையில் அவரது நடவடிக்கைகளை கடைப்பிடித்து வரும் நவசமசமாஜ மத்தியவாதிகள் தமது ''ஹரய'' பத்திரிகையில் அக்டோபர் 10 ம் திகதி இதழில் இந்த சந்திப்பை பெரிதாக்கி காட்டியுள்ளனர்.

தொண்டமான் அரசாங்கத்திற்கு எதிரானவர் அரசியல் கைதிகளை விடுவிக்க அவர் பிரச்சாரம் செய்கிறார் என பெரிதாக பிரமைப்படுத்தி கூறவே நவசமசமாஜ மத்தியவாதிகள் இவ்வண்ணம் கூறுகின்றனர்.

தோட்ட தொழிலாளர் ஜயவர்தனா அரசாங்கத்திற்கு எதிராக போராடுவதை தடுக்கும் பொருட்டு இ. தொ. கா. தலைமைகள் அமைச்சர் சபையில் குந்தி நின்று வேலை பார்ப்பதுடன் லங்கா சமசமாஜ கட்சி — கம்யூனிச நவசமசமாஜ கட்சி துரோக தலைமைகள் வெளியில் இருந்து அதே வேலையையே செய்து வருகின்றன.

நவசமசமாஜ கட்சியாளரின் 'ஹரய' பத்திரிகை அறிக்கையும் இந்த நடவடிக்கையின் ஓரம்சமே.

ஸ்டாலினிஸ்டுகளும் நவசமசமாஜ தலைமைகளும் தொண்டமானின் ''பிரார்த்தனைக்கு'' சுய தலைமைத்துவம் உள்ள தொழிற் சங்கங்களை எந்த ஒரு மாற்று வேலைத் திட்டத்தையும் சமர்ப்பிக்காது அணி திரட்டினர். கடந்த ஆண்டு ஜூன் மாதம் தொழிலாளர் பிரசாரத்தை தடுக்கும் பொருட்டு யூ. என் பி. அரசாங்கம் ''நாடற்றவருக்கு பிரஜா உரிமை வழங்குவது சம்பந்தமான சட்டத்தை'' கொண்டு வரும் போது, தோட்ட தொழிலாளருக்கு பிரஜா உரிமை கிடைத்துவிட்டதாக கூற இ. தொ. கா. தலைமைகள் மட்டும் அல்ல லங்கா சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ கட்சி தலைமைகளும் கூட முன்நின்றன.

இத்தலைமைகள் இச்சட்டத்தை ஏற்றதன் மூலம் தோட்ட தொழிலாளரை இனவாத அடிப்படையில் ஒடுக்குவதை மேலும் ஏற்றுள்ளனர். நாடற்றவருக்கு பிரஜா உரிமை வழங்கல் எனப்பட்டதன் கீழ் கூட பிரஜா உரிமை இது வரை ஒரு தொழிலாளிக்கும் வழங்கப்படவில்லை. அச்சட்டம் தோட்ட தொழிலாளர் போராட்டம் வளர்வதை தடுக்க சமர்ப்பிக்கப்பட்ட கபட நாடகமாக விளங்குகின்றது.

தற்சமயம் இந்திய — இலங்கை ஒப்பந்தத்திற்கு ஆதரவு அளிக்கும் இத்தலைமைகள் யூ. என். பியினர் இனவாத அரச வேட்டையுடன் தொடர்பு கொண்டு சிறீலங்கா சுதந்திர கட்சி முதலாளிகளின் இனவாத ஆத்திர மூட்டல்களுக்கான தருணங்களை தயாரித்து அளிக்கின்றனர். சிறீலங்கா காரர் சுய இனவாத பிரசாரத்தின் போது தொண்டமான் யூ. என் பி. அரசாங்கத்திற்கு பிற்போக்கு பக்க பலம் அளிப்பதன் ஊடாக தோட்ட தொழிலாளர் மீதும் அதனை சுமத்தி நடத்தும் பிரசாரத்தில் இருந்து இதே ஆத்திர மூட்டலே வெளிப்படுகின்றது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, யூ. என். பி. அரசாங்கத்திற்கு பந்தம் பிடிக்காமல் அதனை விரட்டி அடிப்பதற்கும் தொழிலாளரது பொது வேலை நிறுத்தத்தை ஒழுங்கு செய்து தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டி தொழிலாள — விவசாய அரசாங்கத்தை ஆட்சி ஏற்றுவதாலேயே சாத்தியமாகும்.

யூ. என். பி. அரசாங்கத்தை தகர்க்குமாறும் அதனை தகர்க்க தொழிலாள வர்க்கத்தை சுயாதீனமாக அணி திரட்டுமாறும் நிர்ப்பந்தித்து இத்துரோக தலைமையை தோற்கடித்து அப்பொறுப்பை நிறைவேற்ற தொழிலாள வர்க்கம் போராடுதல் அவசியமாகும்.

# இந்திய மக்கள் . . .

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

லிசத்துக்கான பாராளுமன்ற பாதையையும்' கடைப்பிடிக்கின்றன. அநேக நாடுகளில் இது இலட்சோப லட்சம் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்க வழி வகுத்தது. சில்லி கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்ப்புரட்சி நிலைப்பாடு காரணமாக 1973 செப்டம்பரில் சீ. ஐ. ஏ. ஆதரவு இராணுவச் சதியினால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும், விவசாயிகளும் படுகொலை செய்யப்பட்டனர்.

அலன்டேயின் சீர்திருத்தவாதக் கட்சியுடன் ஆட்சியைப் பகிர்ந்து கொண்ட கம்யூனிஸ்ட் கட்சி, சீ. ஐ ஏ யினால் பயிற்றப்பட்ட சில்லி இராணுவத்தினரை 'சீருடையில் உள்ள மக்கள்' என வருணிக்கும் அளவுக்கு சென்றது. பாசிச சதியினால் அவர்களின் மக்கள் முன்னணி அரசாங்கம் வீழ்த்தப்படுவதற்கு சிறிது காலத்துக்கு முன்னதாக சில்லி கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவரான பஞ்சாரோ இந்த ஸ்டாலினிச போக்கினைப் பற்றி கூறியதாவது:

''அதிதீவிர இடதுசாரி போக்குகள் சோசலிசத்தை உடனடியாக 'அறிமுகம்' செய்யுமாறு கூக்குரல் போடுகின்றனர். எவ்வாறு எனினும் தொழிலாள வர்க்கம் பூரண அதிகாரத்தை படிப்படியாக தேடிக் கொள்ளும் என நாம் நம்புகின்றோம். அரச இயந்திரத்தினை எமது கட்டுப்பாட்டுக்குள் கொணரும் நடவடிக்கையாக நாம் இதனை புரட்சியின் மேலாய அபிவிருத்தியின் நலன்களாக பரிணமம் செய்வோம்.

ஆனால் சில்லியின் அரச இயந்திரம் இந்த போலி தீர்க்கதரிசிகளையும் அரசியல் சூழ்நிலைகளையும் எங்ஙனம் உருமாற்றியது என்பதை சகலரும் அறிவர்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் பூண்ட சோசலிச தொழிலாளர் கழகம், இந்தியாவில் மற்றுமோர் சில்லியை தயார் செய்யும் ஸ்டாலினிஸ்டுகளுக்கு எதிராக உறுதியான அரசியல் போராட்டத்தை தொடுக்க முன்வருமாறு வர்க்க நனவுள்ள சகல தொழிலாளர்களையும், இளைஞர்களையும் வேண்டுகின்றது.

இதனை ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் ஸ்டாலினிசம், சீர்திருத்தவாதம் மத்தியவாதங்களுக்கு எதிராக ஈவிரக்கமற்ற போராட்டத்தின் மூலம் அனைத்துலக தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் உலக சோசலிச புரட்சியின் பக்கம் வென்றெடுக்கும் போராட்டத்தை — நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் போராட்டத்தில் இருந்து வேறு படுத்திவிட முடியாது.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களை முதலாளித்துவ கட்சிகளுடனான சகல உறவுகளையும் துண்டித்துக் கொண்டு, சோசலிசக் கொள்கைகளின் அடிப்படையில் தொழிலாளர் — விவசாயிகளின் அரசாங்கத்தை அமைக்கும்படி தொழிலாள வர்க்கம் கோர வேண்டும்.

இப்போராட்டம் ஸ்டாலினிசத் தலைமைகளின் 'கம்யூனிஸ்ட்' முகமூடிகளை கிழித்தெறிய வாய்ப்பளிக்கும்.

இப்போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்ல சோசலிச தொழிலாளர் கழகம், நகர நாட்டுப்புற தொழிலாளர்களை உலக ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் — நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவில் சேருமாறு வேண்டுகின்றது.

தொழிலாளர்கள், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை பின்வரும் கோரிக்கைகளுக்காகப் போராடும்படி கோர வேண்டும்:

- சகல ஏகாதிபத்திய வங்கிக் கடன்களையும்

(7 ம் பக்கம் பார்க்கவும்)

1983 ஜூலை: தமிழர்கள் எப்படி காட்டிக் கொடுக்கப்பட்டார்கள்

கீர்த்தி பாலசூரிய

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக வெளியீடு

This pamphlet can be ordered from

**Neue Arbeiterpresse**
Alfredstr. 71
D – 4300 Essen 1
West Germany

**Pour commander, écrire à
Marxisme Révolutionnaire
B.P. 388
75626 Paris Cedex 13**

Please pay DM 1,50 + DM 0,50 postage
to account no. 211 85 – 431, Postgiroamt Essen

படிப்பகம்

www.padippakam.com



# 'வோல் ஸ்ரீட்' வீழ்ச்சியின் பின்னர்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

இலட்சோப லட்சம் அணி திரட்டப்பட்ட தொழிலாளர்களையும், இளைஞர்கள், ஒய்வு பெற்ற தொழிலாளர்கள், தொழிலாள வர்க்கத்தின் சகல பகுதியினரையும் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும்.

அந்த காங்கிரஸ், 1988 தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்தும் சுயாதீனமான ஒரு தொழிலாளர் கட்சியை நிறுவ வேண்டும் அத்தோடு தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான நலன்களை காக்கும் ஒரு சோசலிச வேலைத்திட்டத்தை ஊர்ஜிதம் செய்ய வேண்டும். தொழிலாளி வர்க்கம், முதலாளித்துவ இரண்டு கட்சி முறையுடனான தொடர்புகளை துண்டிப்பதோடு, தொழிற் சங்க அதிகாரத்துவம் ஜனநாயகக் கட்சியுடன் கொண்டுள்ள அரசியல் தொடர்புகளை உடைத்து எறிய வேண்டும்.

வங்கிகளும், சகல அடிப்படைக் கைத்தொழில்களும் உடமையாளர்களுக்கு எதுவித நஷ்ட ஈடும் இன்றி தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கப் பட வேண்டும். பங்குச் சந்தைகளும் மற்றும் சகல வடிவிலான ஊகங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் ஊகங்களும் ஒழிக்கப்பட வேண்டும். தொழிலாள வர்க்கம் ஒரு தொழிலாளர் அரசாங்கத்தையும், இலாபத்துக்கு அன்றி தொழிலாளர் வர்க்கததின் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு திட்டமிட்ட பொருளாதாரத்தையும் ஸ்தாபிக்க வேண்டும்.

தொழிற் சங்க அதிகாரத்துவம் வக்காலத்து வாங்கும் வர்க்கக் கூட்டு, பொருளாதார தேசியவாதங்களை தொழிலாளர்கள் நிராகரிக்க வேண்டும். அக்டோபர் இறுதி வாரத்தில் மியாமியில் நடைபெற்ற ஏ. எப். எல். — சீ. ஐ. ஓ. மகாநாடு, தொழிற் சங்க அதிகாரத்துவங்கள் தொழிலாள வர்க்கத்தின் இழப்புக்களில் அமெரிக்க முதலாளித்துவத்தைக் காக்க உறுதி பூண்டு உள்ளதைச் சுட்டிக் காட்டியது.

தொழிற் சங்க அதிகாரத் துவங்கள் பாம்பு தைலம் பாதுகாப்பு வாதத்தைப் பரப்புகின்றனர். இது நெருக்கடிக்கான தீர்வு என்பதால் அன்றி, வெளிநாடுகளில் உள்ள வோல் ஸ்ரீட் முதலாளித்துவப் போட்டியாளர்களுடனான வர்த்தகப் போர் நடவடிக்கைகளூடாக 'தமது சொந்த முதலாளி வர்க்கத்துடன் உறவுகளைக் கொண்டிருக்க இடமளிப்பதேயாகும்.

அமெரிக்க தொழிலாள வர்க்கத்தின் கூட்டாளிகள் அமெரிக்க முதலாளிகள் அல்ல என்பதை வர்க்க நனவுள்ள தொழிலாளர்கள் அங்கீகரிக்க வேண்டும். இம் முதலாளிகள் முன்னொரு போதும் இல்லாத அளவில் தொழிற் சங்கங்களை தகர்ப்பதிலும், சம்பளங்களை வெட்டுவதிலும் ஈடுபட்டு உள்ளனர். முழு உலகிலும் — ஜப்பான், ஜேர்மனி, கொரியா, தென் ஆபிரிக்கா மற்றும் சீர்குலைந்த தொழிலாளர் அரசுகளான சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பா, சீனாவிலும் உள்ள தொழிலாளர்களே நிச கூட்டாளிகள்.

தொழிலாள வர்க்கத்தின் தீர்க்கமான பிரச்சினை தலைமை. ஏ. எப், எல். — சீ. ஐ. ஓ. — யூ. ஏ. டபிள்யூ, அதிகாரத்துவங்கள் கடைப் பிடிக்கும் கொள்கைகளால் தொழிற் சங்க இயக்கம் நாசம் ஆக்கப்பட்டு வருவதோடு தொழிலாள வர்க்கம் பட்டினி கிடக்கவும் நேரிடுகின்றது. புதிய கொள்கைகளும் புதிய தலைமையும் அவசியம்.

வேர்க்கஸ் லீக் மட்டுமே முதலாளித்துவத்தின் நெருக்கடி மார்க்சிச் விளக்கத்திற்காக போராடி வரும் ஒரே கட்சியாகும். தொழிலாள வர்க்கத்தின் நலன்களைக் காக்கும் கொள்கைகளுக்காகப் போராடி வருவதும் அதுவே. நாம் இந்த நெருக்கருயின் விளைப் பயன்களைப் பற்றி இடைவிடாது எச்சரிக்கை செய்து வந்துள்ளோம்.

முதலாளித்துவ நெருக்கடிக்கும், சுரண்டலுக்கும் நிச புரட்சிகர பதிலீட்டை எதிர் பார்க்கும் தொழிலாளர்கள் இளைஞர்கள், மாணவர்கள், வேலையற்றோர் அனைவரையும் வேர்க்கஸ் லீக்கில் இன்றே இணையுமாறும் தொழிலாள வர்க்கத்தின் புதிய புரட்சித் தலைமையாக இதனை கட்டி எழுப்பும் படியும் வேண்டுகின்றோம்.

# புகக அங்கத்தினர்களை . .

(முன் பக்கத் தொடர்ச்சி)

னால் கைது செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பட்டனர் இவர்களை 'முறைப்பாட்டின்' பேரில் கைது செய்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

தாக்குதலில் ஈடுபட்ட குண்டர்கள் 'நீங்கள் தான் மக்களை தூண்டுபவர்கள். எங்கே இருக்கிற தொழிலாளர்கள்' எனக் கூறிய வண்ணம் பு. க க. உறுப்பினர்களிடம் இருந்த அடையாள அட்டைகளையும் பிடுங்கினர். அத்தோடு இச்சம்பவத்தை நேரில் பார்க்க கூடிய மக்களையும் இவர்களுக்கு எதிராகத் தூண்டி விட முயற்சி செய்யப்பட்டு உள்ளது.

தோழர் நிஹிசானின் வாயில் அறைந்த குண்டர்கள் 'உன்னை கொல்லுவோம் நீதான் தலைவன்' எனக் கூறியபடி தனியான ஓர் இடத்துக்கு இழுத்துச் சென்று தாக்கினர். இன்னுமோர் குண்டன் தோழர் கீதானந்தாவை சுவருடன் சாத்தி வைத்து கழுத்தில் தாக்கினான். தோழர் சரத் சந்திரவும் இவ்விதம் தாக்குதலுக்கு ஆளானார். இதனால் இவர்கள் கொழும்பு அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றனர். தாக்குதலில் ஈடுபட்ட சகல குண்டர்களும் கத்திகள் வைத்திருந்தனர்.

கூடி நின்ற மக்களுக்கு உண்மை நிலையை தோழர் நிஹிசான் விளக்கி கூறினார். இதனால் குண்டர்களுக்கு மக்கள் ஆதரவு கிடைக்காததோடு பு க. க. உறுப்பினர்களை கொலை செய்யும் திட்டமும் கைகூடவில்லை.

பு. க. க. அங்கத்தினர்களை குண்டர்கள் கைது செய்ததை நியாயப்படுத்திய கொட்டாஞ்சேனைப் பொலிசார் 'இந்தப் பக்கத்தில் பத்தரிகை விற்க வேண்டாம். சக்திகள் இருப்பது தெரிகிறதல்லவா? திருப்பவும் வந்தால் நாமும் 90 நாட்கள் வைத்திருக்க வேண்டி வரும்'' என மிரட்டி மூவரையும் விடுதலை செய்தனர்.

இச்சம்பவம், தொழிலாள வர்க்கத்துக்கும் ஏழைகளுக்கும் எதிராக யூ. என். பி. அரசாங்கம். இராணுவம், பொலிஸ், கொலைகாரர்களை கட்டவிழ்த்து விட்டுள்ளதை தெளிவாக்கி உள்ளது. அரசியல் ரீதியில் தேசவிடைந்து ஈடாட்டம் கண்டு போயுள்ள அரசாங்கமும், முதலாளி வர்க்கமும் தமது ஆட்சியை இந்த பிற்போக்கு சக்திகளை கொண்டு கட்டிக் காக்க முடிவு செய்து உள்ளன. தனியார் படைகளை அமைக்கும் அதிகாரம் யூ. என். பி. எம். பீக்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது: இக்குண்டர்கள் தத்தம் பிரதேசங்களில் அரசியல் எதிர்ப்பாளர்களின் வீடுகளுக்கு தீ வைத்தல், கொலை, தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டு உள்ளனர். நவம்பர் 10 ம் திகதிய 'டெயிலி நியூஸ்' பத்திரிகை 'ஜே. வீ. பி சந்தேக நபர்களின்' வீடுகளுக்கு தீ மூட்டவும், அவர்களை கொலை செய்யவும் 'மக்கள்' முன்வந்துள்ளதாக கூறியது. இது இக்குண்டர் படைக்கு அரசாங்கத்தின் ஆதரவை சுட்டிக் காட்டி உள்ளது.

சமசமாஜ — கம்யூனிச — இ. தொ. கா. தலைவர்கள் காந்தி — ஜயவர்தன உடன்படிக்கைக்கு வழங்கிய மூண்டுகோலின் கீழ் இந்த குண்டர் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டு உள்ளன. இந்த பிற்போக்கு உடன்படிக்கைக்கு இத்தலைவர்கள் வழங்கிய துரோக ஆதரவை உடன் நிறுத்திக் கொள்ளும் படியும் வடக்கு — கிழக்கில் இருந்து ஆக்கிரமிப்பு இந்திய இலங்கை படைகளை வெளியேற்றும் படியும் இத்தலைமைகளை தொழிலாள வர்க்கம் கோர வேண்டும்.

1979 ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இராஜாங்கனை அமைப்பாளர் தோழர் பியதாச யூ. என். பி. குண்டர்களால் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலை பற்றி சுயாதீனமான விசாரணை நடாத்தப்பட வேண்டும் என பு. க. கவும், நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவும் பிரச்சாரம் நடாத்தி வருகின்றன. அவ்வாறே சிலாபத்தில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட பு. க. க. உறுப்பினர்களான விஜே டயஸ், ரூமன் பெரேரா, புருடன் பெரேரா அனைத்துலகப் பிரச்சாரத்தின் தாககம் காரணமாக விடுதலை செய்யப்பட்டனர்.

இக்குண்டர்களைப் பற்றி பு க. க; பொலிசில் முறைப்பாடு செய்து உள்ளது.

இக்குண்டர் தாக்குதலை கண்டிக்கும் படியும், யூ. என் பி அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டு உள்ள குண்டர் இயக்கத்துக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டும் படியும் பு. க. க. வேண்டுகின்றது. தொழிலாள வர்க்க இயக்கத்தினுள் வெளியிடப்படும் அறிக்கைகளின் பிரதிகளை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு அனுப்பும் படி வேண்டுகின்றோம்.

# இந்திய. .

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

இரத்துச் செய்!

- சகல வங்கிகள் 'கறுப்பு பணங்களை' நஷ்ட ஈடின்றி தொழிலாளர் அதிகாரத்தின் கீழ் தேசியமயமாக்கு!
- கல்வி, சுகாதாரம், குடியிருப்பு, தொழில்களை அடிப்படை உரிமைகளாக்கு!
- சகல நிலங்களையும் நஷ்டஈடின்றி தேசியமயமாக்கி, ஏழை விவசாயிகளுக்கு அவற்றை பகிர்ந்து கொடு!
- விவசாயிகளின் கடன்களை இரத்துச் செய்து இலகுவான கடன்களை வழங்கு!
- விவசாய உரங்களுக்கு மானியம் வழங்கு!
- விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை!
- முதலாளித்துவ அரச இயந்திரத்தை நிர்மூலமாக்கி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டு!
- ஆயுதம் தாங்கிய தொழிலாளர்களைக் கொண்ட சோவியத்துக்களை நிறுவு!

(8 ம் பக்கம் பார்க்கவும்)

படிப்பகம்

www.padippakam.com



8

# வடக்கு கிழக்கு யுத்தம் பற்றிய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கூட்டு அறிக்கை

“தற்சமயம் வடக்கு கிழக்கினைப் போன்று தெற்கிலும் இராணுவ தலையீட்டின் ஊடாக நடத்த படும் பைது செய்தல் அடக்கு முறை நடவடிக்கைகளை வன்மையாக கண்டிக்கின்றோம்” என இலங்கை ஆசிரியர் சங்க பிரதம செயலாளர் எச். எம் பெர்னாந்தின் கையெழுத்துடன் வெளியிடப்பட்டுள்ள பத்திரிகை அறிக்கை குறிப்பிடுகின்றது

பார்த்த பாத்திரத்திலேயே இது ஓர் இரட்டை அர்த்தம் உள்ள அறிக்கை என்பது புலனாகின்றது. தமிழ் இனத்தின் சுய நிர்ணய உரிமையை ஏற்பதர்க முன்னர் கூறிய பின்னர் அதனை கைவிட்டு இந்து — இலங்கை ஒப்பந்தத்திற்கு கைச்சாதிட்ட போது அதனால் தமிழ் இனத்திற்கு நிவாரணம் கிடைப்பதாக கூறி ஒப்பந்தத்தினை வாவேற்று பக்கப் பாட்டு பாடிய மத்தியவாத குழுவினரில் ஆசிரியர் சங்க தலைமைத்துவமும் அடங்கும்.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை தமிழ் இனத்தின் பாதுகாப்பாளராக எடுத்துக் காட்டவும் அவர்கள் முன் நின்றனர்.


ஜயவர்தன அரசாங்கம் இலங்கையின் முதலாளித்துவ ஆட்சி என்பவற்றை பேண இன்று இந்திய ஆக்கிரமிப்பு படையினர் நடத்தும் இரத்தக் களரி மிக்க ஆக்கிரமிப்பு ஸ்டாலினிச, சமசமான் தலைமைகள் — இ. தொ. கா. தலைமைகள், இலங்கை ஆசிரியர் சங்க தலைமைகள் உட்பட்ட மத்தியவாதிகள் வழங்கிய அரசியல் மூடி மறைப்பின் கீழ் தயாரிக்கப் பட்டதாகும்

இப்போது இந்த ஆசிரியர் சங்க தலைமை தனது கையாலாகாதனத்தை பேண “இராணுவ தலையீட்டிற்கு” தாம் எதிர்ப்பாளர் எனக் கூறிக் கொள்கின்றது.

இத்தலைமைகள் இந்திய, ஜயவர்தன அரசாங்கங்களிடம் காட்டும் நம்பிக்கை எப்படி எனப் பார்ப்பின் ஆக்கிரமிப்பு படை வடக்கு கிழக்கில் நடத்தும் கொடிய யுத்தம் “இராணுவ தலையீடொன்று எனப்” படுகின்றது. இந்த இராணுவ தலையீடு காந்தி — ஜயவர்தன அரசாங்கங்களால் நடத்தப் படுகின்றது என்பதையும் இவர்கள் மிகக் கவனமாக மூடி மறைத்து உள்ளதை காணலாம்.

“வடக்கு கிழக்கை போன்று தெற்கிலும் இராணுவ தலையீடு” நடப்பதை தோற்கடிக்க வேண்டுமாயின் இ. தொ. கா தலைமைகளைப் போன்று இடதுசாரி முக மூடியிட்டு மிக அவசியமான வேளையில் தொழிலாள வர்க்க வறிய, ஒடுக்கப்பட்ட இனத்தை காட்டிக் கொடுத்து நிற்கும் மத்தியவாத தலைமைகளிக்கு எதிராக அரசியல் போராட்டத்தின் ஊடாக புரட்சிகர தலைமைத்துவத்தை நிலை நாட்டுதல் மிக தீர்க்கமானதாகும்.

## கெல்பான்ட் வழக்கு




அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சித் தலைமையின் எப். பீ. ஐ. ஏஜன்துகளுக்கு எதிராக அக்கட்சியின் முன்னாள் உறுப்பினர் அலன் கெல்பான்டினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விபரங்களைக் கொண்ட புத்தகங்கள் — இரு பாகங்கள் வெளி வந்து உள்ளன. கட்சியில் இருந்து கெல்பான்ட் விலக்கப்பட்டதை அடுத்து அவர் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினதும், அமெரிக்க லேபர் லீக்கினதும் ஆதரவுடன் இவ்வழக்கினை தாக்கல் செய்தார். இப் புத்தகங்கள் வழக்கின் சாட்சிகள், அறிக்கைகள், பத்திரங்கள் முதலானவற்றையும் லியொன் ட்ரொட்ஸ்கியை படுகொலை செய்யவும் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தை அழிக்கவும் ஸ்டாலினிச ஏஜன்டுகள், அமெரிக்க ஏகாதிபத்திய அரசாங்கத்தின் ஏஜன்டுகளுடன் கூட்டாக தொழிற்பட்ட விதத்தினையும் ருசுப்படுத்துகின்றன.

இரு தொகுதிகளதும் விலை ரூபா: 320/=
ஒரு தொகுதி விலை ரூபா. 160/=

தொடர்புகள்:—
ஆனந்த வக்கும்புர
90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு 10.

## தமிழ் தேசிய

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாள வர்க்கமானது இந்த பொறுப்பினை நிறைவேற்றுவதாயின் முதலாளித்துவத்தில் இருந்து சுயாதீனமாகி யூ. என். பி. யை விரட்டி சிறீலங்கா சுதந்திர கட்சி பிற்போக்காளருக்கு இடமளியாது தொழிலாளரதும் விவசாயிகளதும் அரசாங்கத்தை ஆட்சியேற்றுவதற்காக தமிழ் தேசியததையும் வறிய விவசாயிகளையும் தம்மை சூழ அணி திரட்ட வேண்டும் தேசிய ஒடுக்கு முறையையும் முதலாளித்துவ ஆட்சியையும் பேண சமர்ப்பிக்கபட்ட மாகாண சபை சட்டத்திற்கு எதிராக தமிழ் தேசியத்தின் சுய நிர்ணய உரிமையை ஏற்கும் சிங்கள — தமிழ் மொழிப் பேசும் மக்களது சோசலிச குடியரசிற்கான முன்நோக்கானது தொழிலாள வர்க்கத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டும் இநத போராட்டத்தின் போது இந்திய பிற்போக்கு காங்கிரஸ் — அ. தி. மு. க. — தி. மு. க. முதலாளிகளுக்கு எதிராக இந்திய தொழிலாளரதும் விவசாயிகளதும் ஆதரவை அணி திரட்டிக் கொள்வது மிகத் தீர்க்கமானது ஆகும் என்பது காந்தி அரசாங்கத்தின் பிற்போக்கு தலையீட்டின் மூலம் மீண்டும் புலப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கும், மாகாண சபை சட்டத்திற்கும், யூ. என். பி. அரசாங்கத்திற்கும் சமசமாஜ கம்யூனிச, இ. தொ. கா. தலைமைகள் வழங்கி வரும் பக்க பலத்தை தகர்க்கும் படியும், தொழிலாள விவசாய அரசாங்கத்திற்கான வேலைத்திட்டத்தை சமர்ப்பிக்கும் மாறும் நிர்ப்பந்தித்து துரோக தலைமைகளை தொழிலாள வர்க்க இயக்கத்தினுள் அரசியல் ரீதியாக விரட்டி விடவும் செய்யும் போராட்டம் மேற் குறிப்பிட்ட போராட்டத்துடன் இரண்டறக் கலந்து உள்ளது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இலங்கையிலும் அதனுடன் நட்பு பூண்ட சோசலிச தொழிலாளர் கழகம் இந்தியாவினுள்ளும் தொழிலாள வர்க்க புரட்சிகர முன்நோக்கின் அடிப்படையில் தொழிலாளர்களை அணி திரட்ட போராடுகின்றன புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணைந்து புரட்சிகர தலைமைத்துவத்தை கட்டி எழுப்பும் மாறு தொழிலாளர்களையும் ஒடுக்கப்படுவோரையும் நாம் வேண்டுகின்றோம்.

## இந்திய . .

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

- ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை உத்தரவாதம் செய்!
- இந்திய ஆக்கிரமிப்பு படைகளை ஈழத்திலிருந்து வாபஸ் பெறு

**Subscribe to Tholilalar Pathai**

*Have it posted.*
*20 issues: DM 26,-*

*Write to:*
*Neue Arbeiterpresse*
*Alfredstr. 71*
*D-4300 Essen 1*
*West Germany*

**Ecrire à**
**Marxisme Révolutionnaire**
**B.P. 388**
**75626 Paris Cedex 13**

*Subscription payable to account no. 211 85-431, Postgiroamt Essen (effected at any post office)*

***Fund***

*In order to reprint and circulate Tholilalar Pathai regularly in Germany we need your financial support. Please send donations to Postgirokonto "Neue Arbeiterpresse", B. Rippert, Nr. 211 85-431 Postgiroamt Essen. Note " Tamil Paper"*
*All incoming money in excess of the printing costs will be used to support the RCL in Sri Lanka.*

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு -10, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புரவினால் மஹரகம நாவலவத்தை வீதி 53ம் இலக்கத்தில் உள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்